# பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்கள் இலங்கைக்கான விஜயத்தை நிறைவுசெய்துள்ளனர்

2026, சனவரி 28

பணிக்குழு வருகையின் பின்னரான பத்திரிகை வெளியீடானது நாடொன்றிற்கான விஜயமொன்றினைத் தொடர்ந்து பூர்வாங்கமாகக் கண்டறிந்தவைகளை தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுக்களின் கூற்றுக்களை உள்ளடக்கும். இக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி அது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இப்பணிக்குழு நிறைவேற்றுச் சபை கலந்துரையாடலுக்கு வழிவகுக்கமாட்டாது.

**கொழும்பு, இலங்கை:** தித்வா புயலின் தாக்கம் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு திரு. இவான் பப்பாஜியோர்ஜியு தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிக்குழுவொன்று 2026 சனவரி 22 தொடக்கம் 28 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தது. விஜயத்தினை நிறைவுசெய்து, திரு. பப்பாஜியோர்ஜியு பின்வரும் அறிக்கையினை வெளியிட்டுள்ளார்:

‘‘பணிக்குழு விஜயத்தின் போது, உட்கட்டமைப்பிற்கு ஏற்பட்ட சேதம் மற்றும் வாழ்வாதார இழப்பு உள்ளடங்கலாக புயலின் பொருளாதார மற்றும் சமூக தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு அதிகாரிகளுடனும் தொடர்புடைய ஆர்வலர்களுடனும் குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது. இயற்கை அனர்த்தத்திற்கான இறைசார் பதிலிறுத்தல் அதேபோன்று நாணயக் கொள்கைக்கும் நிதியியல் துறை உறுதிப்பாட்டிற்குமான உள்ளார்ந்தங்கள் குறித்து இக்கலந்துரையாடல் கவனம்செலுத்தியது. எதிர்வரும் காலத்தில் அதிகாரிகளின் கொள்கை நோக்கங்கள், அவர்களின் நிதியிடல் தேவைகள், விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் இலங்கையின் மீட்பு மற்றும் மீள்கட்டியெழுப்புதல் முயற்சிகளுக்கு பன்னாட்டு நாணய நிதியம் எவ்வாறு சிறந்த முறையில் ஆதரவளிக்கலாம் என்பது பற்றிய விரிவான கருத்து பரிமாற்றல்களை எமது சந்திப்பு உள்ளடக்கியிருந்தது.

‘‘இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பத் தொடங்கியிருப்பதனால், இறை மற்றும் படுகடன் நிலைபெறுதன்மையில் எய்தப்பட்ட அடைவுகளை பாதுகாத்தல், கருத்திட்ட மீள்முன்னுரிமைப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலாக அரசாங்க முதலீட்டு முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கும் அத்துடன் செலவிடலானது வெளிப்படையாகவும் பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்துடன் இணங்கும் விதத்தில் நிறைவேற்றுவதற்கும் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர். அவர்கள், புயலினால் விகிதசமமற்றரீதியில் பாதிக்கப்பட்ட வறியவர்களையும் பாதிக்கப்படகூடியவர்களையும் பாதுகாப்பதற்கு, சமூக பாதுகாப்பு வலைகளை தொடர்ந்தும் வலுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

‘‘விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் அடுத்த மீளாய்விற்காக பொருளாதார கொள்கைகள் தொடர்பான கலந்துரையாடல்களை மீண்டும் தொடங்குவதற்கு, கூடிய விரைவில் பன்னாட்டு நாணய நிதிய பணிக்குழுவொன்றை பணிக்கமர்த்துவதற்கு நாம் திட்டமிடுகின்றோம். பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கும் தாக்குபிடிக்கும் தன்மையையும் நிலைபேறான வளர்ச்சியையும் ஊக்குவிப்பதற்குமான அதன் முயற்சிகளில் நாட்டிற்கு ஆதரவளிப்பதற்கு இலங்கையுடனான எமது ஒத்துழைப்பையும் தயார்நிலையையும் நாம் மீண்டும் உறுதிப்படுத்துகின்றோம்.

‘‘பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுவானது, சனாதிபதியும் நிதி அமைச்சருமான அதிமேதகு அநுர குமார திசாநாயக்க, பிரதம அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, அதிமேதகு தொழிற் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி. அனில் ஜயந்த பெர்ணாந்து, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரிக்கான செயலாளர் முனைவர் ஹர்ஷன சூரியப்பெரும, சனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் திரு. துமிந்த ஹூலங்கமுவ, ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் ஆகியோருடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தது. தனியார் துறையினதும் சிவில் சமூக அமைப்புக்களினதும் பிரதிநிதிகளையும் அபிவிருத்தி பங்காளர்களையும் பணிக்குழு சந்தித்திருந்தது. இவ்விஜயத்தின் போது வழங்கப்பட்ட உன்னதமான ஒத்துழைப்பிற்காக அதிகாரிகளுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.’’